2024 பிப்ரவரி 22]

கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த ஆண்டே அதற்கான கட்டடம் கட்டித்தர முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே ஒரு கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கான நன்றியைத் தெரிவிக்கின்ற அதேவேளையில், உடனடியாக அந்தக் கட்டடம் கட்டித்தரப்படுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார். உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு அவர் கையிலேயே அதற்கான தீர்வு இருக்கிறது. அக்கட்டடத்தைச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டித்தர வேண்டும் அல்லது ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் வரக்கூடிய மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின்கீழ் செய்ய வேண்டும். குறிப்பாக, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரை, தற்போது ஏறத்தாழ 35,000 கடைகள் இருக்கின்றன. அந்த 35,000 கடைகளுக்கும் துறையின் சார்பில் கட்டடங்கள் கட்டுவது கடினமான ஒன்றுதான். ஆகவே, ஆங்காங்கு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதிகளைத் தந்து உதவுவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

44—

கலை பண்பாட்டு மையம்

***21409—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு மண்டலக் கலை பண்பாட்டு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து 96 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காஞ்சிபுரத்தில் மண்டலக் கலை பண்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. இம்மண்டலக் கலை பண்பாட்டு மைய அலுவலகம்மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தின் கலைப் பணிகள், விழாக்கள், மாவட்ட அளவில் விருதுகள் தேர்வு செய்தல், கலைப் போட்டிகள், அரசு விழாக்கள் ஆகியவை மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுவதால், திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு மண்டலக் கலை பண்பாட்டு மைய அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை என்னும் இத்திருத்தலத்தில் ஐம்புலன்களுக்கு ஆன்மிக விருந்து, பண்ணோடு வேத பாசுரங்கள், நாமணக்க நெய்வேத்தியங்கள், இறை தன்மைக்கே உரிய தூப, தீப, புஷ்ப கந்த நறுமணங்கள் இவையாவும் சேர்ந்து விவரிக்க இயலா அனுபவம் பெறவைக்கும் பெருமைக்குரிய திருத்தலப் பூமி திருவண்ணாமலையாகும். தொன்மைமிக்க, தகமைமிக்க, எழில்மிக்க, இலக்கண வளமிக்க, ஒலியில் ஓங்குதல்மிக்க, பொதிவுமிக்க, புனைவுமிக்க தமிழ்மொழியின் உண்மையான உணர்வாளர்கள் ஒன்று சேர்ந்து கலாச்சாரம் என்பது ஒரு சமூகத்தின் மொழி என்பதை உணர்ந்து, கலை, இலக்கியம், மதம், வரலாறு, பாரம்பரியம், சடங்குகள், நடத்தைகள் ஆகியவற்றை நெறிமுறைகளுடன் இத்திருத்தல பூமி வளர்த்து வருவதை திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். அவ்வாறு*

2024 பிப்ரவரி 22]

இருக்கையில் கலையையும், பண்பாட்டையும் அருகிலுள்ள மாவட்டத்திலிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள். எனவே, பலகாலமாகப் பேணப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் கொண்ட, தமிழர் கலைப் பண்பாட்டினை மேலும் சிறப்புறச் செய்ய இருப்போர், இல்லாதோர், கற்றோர், கல்லாதோர், அனைவருக்கும் பொதுவாக அகமகிழ்வு அளித்து வருகின்ற அற்புத பூமியாம் திருவண்ணாமலையில், திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக்கொண்டு கலை பண்பாட்டு மைய அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை பண்பாட்டுத் துறையின்கீழ் நம் மாநிலம் 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்த பகுதிகளில் இருக்கக்கூடிய மாவட்டங்களை உள்ளடக்கி மண்டல அலுவலகங்கள் செயல்பட்டுவருகின்றன. அந்த வகையில் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய 7 மாவட்டங்களில் கலை பண்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. காஞ்சிபுரத்தில் உள்ள மண்டல அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. ஏற்கெனவே, காஞ்சிபுரம் மண்டலம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல நல்ல தகவல்களைத் தந்தார்கள். மாண்புமிகு உறுப்பினரோடு, நம்முடைய துறை சார்ந்த அலுவலர்களை அனுப்பி, அங்கே நேரில் சென்று அவரோடு கலந்துபேசி, கலை பண்பாடு தொடர்பான விழாக்களை நடத்துவதற்கும், கூடுதலாக எந்தெந்த வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமோ, அவற்றைச் செய்வதற்கும் நிச்சயமாக துறை பரிசீலிக்கும். எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்துபேசி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2024 பிப்ரவரி 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகக் கூறுகின்ற இந்த அரசு, தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, திருவண்ணாமலை தலத்தினுடைய, ஆன்மிக பூமியினுடைய நலன்களைக் கருத்திலேகொண்டு, திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு கலை பண்பாட்டு மைய அலுவலகம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் 7 மண்டலங்களாக கலை பண்பாட்டு மைய அலுவலகங்கள் செயல்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவற்றில் எத்தனை அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலே செயல்பட்டு வருகின்றன, எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதேபோல, தமிழ் வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படும் கலை பண்பாட்டு மையங்களுக்கு ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையின் மூலமாக எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக்கொண்டு, கலை பண்பாட்டு மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டதற்கு, ஏற்கெனவே நான் தெரிவித்த பதிலை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அதேநேரத்தில் துறையின்கீழ் 7 மண்டலங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற சூழ்நிலையில் வாடகைக் கட்டடங்களில் இருக்கக்கூடிய அலுவலகங்கள் எத்தனை, சொந்தக் கட்டடங்களில் இயங்கக்கூடிய அலுவலகங்கள் எத்தனை என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்குரிய பதில் என்னிடத்தில் கைவசம் இல்லை. இருந்தாலும், அதுகுறித்து நடவடிக்கை எடுத்து,

2024 பிப்ரவரி 22]

விரைவாக அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.*

திரு. A.G. வெங்கடாசலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கொங்கு பகுதியில் சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் தீரன் சின்னமலையுடன் போர் படைத் தளபதியாக இருந்து போராடி, ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்ட மாவீரன் குணாளன் நாடார் அவர்களுக்கும், ஈரோடு மாவட்டத்தின் மொழிப்போர் தியாகி, மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட எளிய மாமனிதர், கோபி முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பெட்டிக்கடை வெங்கிடு என அனைவராலும் பாசத்தோடு அழைக்கப்பட்ட கோபி G.B. வெங்கிடு ஆகிய இருபெரும் தியாகிகளுக்கும் முழு திருவுருவச்சிலையுடன்கூடிய கலையரங்கம் அமைத்திட அரசு முன்வருமா என தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு சீமையிலே, சுதந்திரப் போராட்டத்திற்காக முதலில் குரல் கொடுத்தவர் மாவீரன் தீரன் சின்னமலை. அவரோடு பல்வேறு தளபதிகள் இணைந்து, ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவர்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏற்கெனவே அனுமதியளிக்கப்பட்டு, அங்கே அவருடைய படைத்தலைவர்களில் ஒருவரான பொல்லான் அவர்களுக்கு நினைவரங்கம் அமைப்பதற்காக அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. நினைவரங்கம் அமைப்பதற்கு இடமும் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. அந்தப் பணி விரைவில் துவங்க இருக்கிறது. அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், திரு. குணாளன் நாடார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து எனக்கு சமீபத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதம் வழங்கியிருக்கிறார்கள். துறை அதைப்பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.*

அதேபோல, மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபி வெங்கிடு அவர்களைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். 1996 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக நான் பணியாற்றிய காலம் நினைவிலே இன்னும் பசுமையாக இருக்கிறது. அதேநேரத்தில் நாங்களெல்லாம் ஈரோடு மாவட்டத்தில் கழகப் பணியாற்றுகின்றபோது, எங்களுக்கெல்லாம் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, எங்களையெல்லாம் வழி நடத்தியவர் அவர். அவரும் மரியாதைக்குரியவர். அவருக்கு நினைவரங்கம் அமைப்பது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்துபேசி, உரிய நேரத்தில் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

கால்நடை மருத்துவமனை

***9738—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், சோராஞ்சேரி ஊராட்சி, அணைக்கட்டுச்சேரி கிராமத்திலுள்ள ஜெ.ஜெ. நகர் பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், சோராஞ்சேரி ஊராட்சி, அணைக்கட்டுச்சேரி கிராமத்திலுள்ள ஜெ.ஜெ. நகர் பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இன்று சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொன்னாலும், தொடர்ந்து